**Publication: Tamil Murasu, pg 06**
**Date: 16 June 2022**
**Headline: Singaporean wins gold at World Para Swimming championship**

# உடற்குறையுள்ளோருக்கான நீச்சல் போட்டி: சிங்கப்பூர் வீராங்கனை வெற்றி



உடற்குறையுள்ளோருக்கான உலக வெற்றியாளர் நீச்சல் போட்டியில் தங்கம் வென்றார் யிப் பின் சியூ (நடுவில்). **படம்: உடற்குறையுள்ளோருக்கான விளையாட்டு மன்றம்**

மடீரா: போர்ச்சுகலில் நடைபெற்றுவரும் உடற்குறை உள்ளோருக்கான உலக வெற்றியாளர் நீச்சல் போட்டியில் சிங்கப்பூர் வீராங்கனை யிப் பின் சியூ வாகை சூடினார். மகளிருக்கான 100 மீட்டர் எஸ்2 மல்லாந்த நீச்சல் போட்டியில் தங்கப் பதக்கத்தைத் தக்கவைத்துக்கொண்டார்.

ஐந்து முறை பாராலிம்பிக் வெற்றியாளரான யிப், 2 நிமிடம் 15.16 வினாடிகளில் போட்டியை முடித்தார். உலக வெற்றியாளர் போட்டியில் இது இவருடைய நான்காவது தங்கப் பதக்கமாகும்.

2019ல் நடைபெற்ற முந்தைய போட்டியில் மகளிருக்கான 50 மீட்டர், 100 மீட்டர் மல்லாந்த நீச்சல் எஸ்2 போட்டிகளில் யிப், 30, வென்றிருந்தார்.

2010ல் 50 மீட்டர் எதேச்சை பாணி நீச்சல் போட்டியில் இவர் முதன்முறையாக தங்கப் பதக்கம் வென்றிருந்தார்.

அடுத்ததாக, 2024 பாரிஸ் பாராலிம்பிக் போட்டிகளில் சிறந்து விளங்க இவர் கவனம் செலுத்தி வருகிறார்.